DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.693/2024**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | தமயந்தி |
| Husband Name | : | பழனியாண்டி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026.

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அன்னைவேல் சிட்டியில் வசித்து வருகிறேன். **அ.சா.1** உமாராணியை தெரியும். தேதி ஞாபகமில்லை. சம்பவம் நடந்த அன்று இரவு 08.30 மணியை போல தற்செயலாக அன்னைவேல் சிட்டி தெருவில் போய் கொண்டிருந்த போது, அங்கு நின்றவர்கள் களவு போய்விட்டது என்று சொன்னார்கள். அப்போது நான் சென்று பார்த்த போது அங்கு **அ.சா.1** ன் கணவர் சுமார் இரவு 08.45 மணிக்கு அங்கு வந்தார். நான் அப்போது தாலி செயின் களவு போன விபரத்தை தெரிந்துகொண்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 30.06.2023ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் நான் வீட்டில் இருந்து அன்னை வேல் சிட்டி சந்திப்பிற்கு வந்த போது, அ.சா.1

செல்வராணியிடம் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் அவருடைய தாலி செயினை பறித்துக்கொண்டு சென்றுவிட்டதாக கேள்விபட்டேன் என்றும், அப்போது அங்கு உமாராணியின் கணவர் தாண்டவராஜன் மற்றும் இந்திராணியின் கணவர் பாபு ஆகியோர்கள் அங்கு வந்தார்கள் என்றும், அவர்களிடம் என்னவென்று கேட்ட போது, அடையாளம் தெரியாத இரண்டு பேர் இருசக்கர வாகனத்தில் அன்னை வேல் சிட்டிக்குள் வந்தார்கள் என்றும், திடீரென இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து வந்தவன் 12 பவுன் எடையுள்ள இரண்டு காசு, இரண்டு குண்டு, மாங்கல்யத்துடன் கூடிய தங்க தாலி சங்கிலியை அறுத்துக்கொண்டு அலங்காநல்லூர் ரோட்டில் வேகமாக சென்றுவிட்டார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் சுமார் இரவு 08.30 மணிக்கு சம்பவ இடம் சென்ற போது ADSP, SP, Inspector மற்றும் போலீஸார்கள் அங்கு இருந்தார்களா என்றால், நான் போகும் போது இல்லை. நான் போய் சிறிது நேரத்தில் மேற்படி அனைவரும் வந்தார்கள். என் கணவர் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே எனக்கு காவல்துறையில் உள்ள பணி நிலைகள் குறித்த அதிகாரிகளை எனக்கு தெரியும். மேற்படி போலீஸார்கள் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தி அங்கு வைத்து புகாரை பெற்றுவிட்டு தான் காவல்நிலையம் சென்றார்கள். மேற்படி புகாரை சம்பவ இடத்தில் வைத்து காவல் அதிகாரி எழுதியதில் **அ.சா.1** கையொப்பம் செய்ததை நான் பார்த்தேன். நான் சம்பவ இடத்திற்கு போன போது **அ.சா.1** நன்கு பேசும் நிலையில் தான் இருந்தார், அவருக்கு காயம் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. நான் தற்செயலாக தான் அங்கு சென்றேன். மறுநாள் காலையில் திருடு போனதாக சொல்லப்படும் தாலி செயினை தரையில் எடுத்ததாக கேள்விபட்டேன். மறுநாள் புகார் வேண்டாம் என்றும் தவறுதலாக

**புகார் கொடுத்துவிட்டேன் என்று அ.சா.1 சொன்னதாக கேள்விபட்டேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.10 17:58:14 +0530